பக்கங்கள்: நான்கு
யாழ்ப்பாணம்
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 18 ஞாயிற்றுக்கிழமை (04-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 311

# இராணுவ நடவடிக்கைகள் வடக்கில் தொடர்ந்து நடக்கும்

## இந்தியாவில் பிரேமா அறிவிப்பு

புதுடில்லி, அக்டோபர் 4

வடக்கில் இராணுவ நடவடிக்கைகள் தொடரப்படும். அங்கு வாழும் மக்களைக் காப்பாற்றுவதற்கு இராணுவ நடவடிக்கைகள் அவசியம்.

இவ்வாறு ஸ்ரீலங்கா ஜனாதிபதி புதுடில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியதாவது:- இலங்கையின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதில் எனது அரசு ஆர்வம் கொண்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு நாம் மூன்று நிபந்தனைகளை விதித்துள்ளோம்.

1. அவர்கள் ஆயுதங்களைப் பாவிப்பதை நிறுத்துவதற்கு ஒப்புக்கொள்ள வேண்டும்.
2. ஜனநாயக வழிமுறைக்கு வருவதற்கு அவர்கள் இணங்க வேண்டும்.
3. ஏனைய அரசியல் கட்சிகள் தேர்தலில் போட்டியிடுவதற்கு உள்ள உரிமையை அவர்கள் அங்கீகரிக்க வேண்டும்.

இந்த நிபந்தனைகளை ஏற்றால் மட்டுமே நாம் விடுதலைப் புலிகளுடன் பேசுவோம்.

## மன்னாரில் 'வேக அதிரடி' முடிவுற்று விட்டதாம்!

### ஊரடங்கும் நீக்கம்

கொழும்பு: அக்: 4

மன்னார் மாவட்டத்தில் அமுலில் இருந்த ஊரடங்கு நேற்று மாலை 6.00 மணியுடன் நீக்கப்பட்டதாகக் கூட்டுப் படைகள் தலைமையகம் அறிவித்தது.

இதேசமயம், கடந்த நான்கு நாட்களாக மன்னார் மாவட்டத்தில் இடம்பெற்று வந்த "வேக அதிரடி" இராணுவ நடவடிக்கைகள் நேற்றுக் காலையுடன் முடிவுற்று விட்டதாக படை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத் தளபதி சிசில் வைத்தியரத்னாவின் வழிகாட்டல்களுக்கு அமைய, பிரிகேடியர்கள் ரஜிவ்விஜயரத்ன, சரத் பெரேரா ஆகியோரின் உதவியுடன், வட பகுதி தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி டீ சில்வா இராணுவ நடவடிக்கைகளை மேற்கொண்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-10)

## ராஜாராம் நீக்கம்

தமிழக முன்னாள் அமைச்சரும் அ. தி. மு. க வின் எம். எல். ஏயுமான கே. ராஜாராம் கட்சியிலிருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

ஜெயலலிதா அரசில் உணவுத் துறை அமைச்சராக இருந்த ராஜாராம் சிலமாதங்களுக்கு முன்னர்தான் அப்பதவியிலிருந்து விலக்கப்பட்டார். தற்போது கட்சியிலிருந்தும் அவர் விலக்கப்பட்டிருக்கிறார்.

எனினும் தொடர்ந்து சுயேச்சை எம். எல். ஏயாக அவர் செயற்பட முடியும்.

தமிழக முதலமைச்சர் பதவியிலிருந்து ஜெயலலிதாவை அகற்றுவதற்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பல கட்சிப் பிரமுகர்களைக் கொண்ட குழுவில்தாமும் இருப்பதாக ராஜாராம் அறிவித்ததை அடுத்தே அவர் கட்சியிலிருந்து விலக்கப்பட்டிருக்கிறார். (உ-க)

## இராணுவ நடவடிக்கையால் மன்னாரில் 16 ஆயிரம் பேர் மீண்டும் இடம்பெயர்வு

மன்னார் மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் சுமார் 16 ஆயிரம் பேர் மீண்டும் இடம்பெயர்ந்து மடு அகதி முகாமுக்கு வந்திருப்பதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஏற்கனவே இடம்பெயர்ந்து மீளக் குடியமர்த்த இவர்கள் மீண்டும் அகதி முகாமை நாடி வந்துள்ளனர் என்றும்—

இதனால் மடு முகாமில் பெரும் நெருக்கடியான நிலை ஏற்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மீளக் குடியமர்த்த மக்களுக்கு, விடுதலைப் புலிகள் பொருளாதார உதவிகளைச் செய்து அவர்களை விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுத்தி இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ-5)

## பிரபாவை நாடு கடத்த பிரேமா உறுதியளித்தாராம்

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ். ஜனாதிபதி பிரேமதாஸா பேச்சுக்களின் போது—

ராஜீவ் காந்தி கொலைச் சம்பவம் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. வே. பிரபாகரனை நாடு கடத்தும் விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டதாகவும் —

அதற்கு ஆவன செய்வதாக ஜனாதிபதி பிரேமதாஸா உறுதியளித்தார் என்றும் பி. பி. ஸி. நேற்றிரவு தெரிவித்தது.

விடுதலைப் புலிகளின் உயர் தலைவர் பிரபாகரனை இந்தியா கேட்டுக் கொள்வது போல், இந்தியாவிடம் ஒப்படைக்க இலங்கை அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்று

(4 ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்கால நடவடிக்கையாக அரச ஊழியருக்கு ரூ. 1,000 சம்பள உயர்வு வழங்குக!

யாழ்ப்பாணம், அக். 4

அரசாங்க ஊழியர்களுக்கு, இடைக்கால நடவடிக்கையாக ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க ஊழியர்களின் பல தரப்பினரையும் பிரதிநிதித்துவம் செய்யும் ஐம்பதுக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் சேர்ந்து அரசிடம் இக்கோரிக்கையை விடுத்துள்ளன.

அரச ஊழியர்களின் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் குழு ஒன்று அண்மையில் பொதுநிர்வாகம், மாகாண சபைகள் அமைச்சர் திரு. பெஸ்டன் பெரேராவைச் சந்தித்தது.

சம்பள நிர்ணய சபை அரச ஊழியரின் புதிய சம்பளத் திட்டத்தை வகுக்கும் வரை காத்திருக்க முடியாது என்றும்—

இடைக்கால நடவடிக்கையாக ஆகக் குறைந்தது ஆயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்கவேண்டும் என்றும் வலியுறுத்தியது.

இந்த விடயத்தை அமைச்சரவையின் கவனத்துக்குக் கொண்டு வருவதாக அமைச்சர் தெரிவித்தார். (அ-126)

## நேற்றுப் பரவலாக படையினர் ஷெல் தாக்கு

ஆனையிறவு, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களில் இருந்து நேற்று அதிகாலை வேளை குடியிருப்புப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இதேசமயம், பூநகரி கல்முனைப் பகுதியில் இருந்தும் ஷெல்தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இதற்கிடையில்—

காரைநகர் இராணுவ முகாமில் இருந்து நேற்று நண்பகல் வேளையிலும்—

பலாலியில் இருந்து நேற்று அதிகாலை 1 மணியளவிலும் ஷெல் தாக்குதலும், சரமாரியான துப்பாக்கிப் பிரயோகங்களும் நடத்தப்பட்டன. (ஓ-15)

## தாக்குதல் நடக்கலாம் என மடுப்பகுதி அகதிகள் அச்சம்

யாழ்ப்பாணம், அக். 4

மன்னார், மடுவில் உள்ள அகதிகள் இராணுவத்தினரின் தாக்குதல்கள் தம்மீது நடைபெறலாம் என்ற பீதியில் இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இராணுவ நடவடிக்கை என்னும் பெயரில் மன்னாரில் படையினர் நடத்திய கண்மூடித்தனமான தாக்குதல்களை அடுத்தே அகதிகளிடையே அச்சம் தோன்றியுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டது.

மடு முகாமில், வசதிகளில்லாத நிலையில் சுமார் 29 ஆயிரம் மக்கள் தங்கியுள்ளனர் என்றும்—

தச்சனாமருதமடுவில் புதிதாக அமைக்கப்பட்ட முகாமும் பெருகிவரும் அகதிகள் எண்ணிக்கையால் நெருக்கடி நிலையை அடைந்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-5)

## களப்பலியான வீரர்களுக்கு மக்கள் திரண்டு அஞ்சலி

யாழ்ப்பாணம், அக். 4

கட்டைக்காடுப் பகுதியில் இராணுவ ஆயுதக்கிடங்கு கைப்பற்றப்பட்ட தாக்குதல் சம்பவத்தில் களப்பலியான புலி வீரர்களின் புகழுடல்கள் நேற்று குடாநாட்டின் பல பகுதிகளிலும் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன.

சுன்னாகம் மத்திய சந்தையில் அமைக்கப்பட்ட விசேட மேடையில் நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

அங்கு பெரும் எண்ணிக்கையானவர்கள் கண்ணீர் மல்க தமது அஞ்சலியைச் செலுத்தினர். மாலை 4 மணிக்கு அஞ்சலிக் கூட்டம் இடம்பெற்றது. அங்கு விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் இரங்கலுரை நிகழ்த்தினர்.

வீரமரணமடைந்த இளமாறன், ராஜவதனன் ஆகியோரது புகழுடல்கள் குருநகர், பாஷையூரிலுள்ள அவரவரது இல்லங்களில் நேற்றுக் காலை மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தன.

கொக்குவில் கேணியடிப்பகுதியிலும் புகழுடல்கள் மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டன. (ஓ-5-89-51-15)

## இராணுவத்துக்கு ஏற்பட்ட இழப்புகளால் பேச்சுவார்த்தைக்கு அரசு இணங்குகிறது

### வெரித்தாஸ் வானொலி வெளியிடும் தகவல்

மணிலா, அக். 4

விடுதலைப் புலிகளின் திடீர் தாக்குதலில் இராணுவத்துக்கு பலத்த சேதம் ஏற்படுவதால் பொதுமக்களிடையே இராணுவத்தினருக்கு [illegible]ப்புக் குறைந்து வருகிறது. எனவே ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது.

"வெரித்தாஸ்" வானொலியின் தமிழ் ஒலிபரப்பில் நேற்று இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

வெரித்தாஸ் அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது:-

### சண்டை நவம்பரில் ஓய்ந்து விடும்

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் ஸ்ரீலங்கா இராணுவத்துக்கும் இடையிலான சண்டை நவம்பர் தொடக்கத்தில் [illegible] ஓய்ந்து விடும் என்று உயர் நிலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இது தொடர்பான இரகசியப் பேச்சுவார்த்தைகளில் இரு தரப்புக்களும் ஈடுபட்டுள்ளன.

இலங்கை ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ சார்பில் பிரட்மன் வீரக்கோனும், வெளியுறவுச் செயலாளர் பெர்னாட் திலகரத்னாவும் [illegible] ஆகியோரும் இரகசியப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்கின்றனர்.

### நடைமுறை சாத்தியமான தீர்வு

இந்த 4 பேரும் கொழும்பில் அடுத்தடுத்து 8 நாட்களுக்கும் சந்தித்து நடைமுறைச் சாத்தியமான தீர்வை

(4 ஆம் பக்கம் பார்க்க)

இயற்கை வளம எங்கள் செல்வம் - அதை
இயன்ற மட்டும் பேணுவோம் வாரீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

அலுமாரி, புத்தக அலுமாரி, சோகேஸ், மேசை, சாப்பாட்டு மேசை, தையல் மெஷின், கட்டில்கள், மெத்தைகள் கந்தோர் மேசை, கதிரைகள், கதிரை செற்றிகள், குசன் செற்றிகள் விற்பனைக்குண்டு. தொடர்பு: 07, கைலாசபிள்ளையார் கோவில் பின் வீதி, நல்லூர். [22749]

2 மாதம் நிரம்பிய பொமரேனியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: இல. 117, சப்பல் வீதி, யாழ்ப்பாணம். [5360]

வார்க் கோழிகள், 20 நாட்கள், ஒரு மாதம், இரண்டு மாதம் நிரம்பிய குஞ்சுகள் மற்றும் பன்ரம் (Bantam) பாமாஸ் (Bhamas) கோழிகள் விற்பனைக்குண்டு. இவை படப்பிடிப்பாளர்கள், 131/1, அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். [22753]

Dobermann pincher X Rhodesian Ridgeback 3 மாத பெண் நாய்க்குட்டி விற்பனைக்குண்டு. 32, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். [22757]

### மணமகன் தேவை

யாழ்ப்பாண, கத்தோலிக்க கனடாப் பிரஜையான, படித்த அழகிய 42 வயது மணப்பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். திருமணம் இலங்கையில். மங்கள ஏஜென்சி, கொய்யாத் தோட்டம் யாழ்ப்பாணம். [22761]

### ஆசிரியர் தேவை

கோண்டாவில் பண்டிப்போவிற்கு அண்மையில் இருக்கும் வீட்டுப் பிள்ளைக்கு (ஆண்டு - 5) ஆங்கிலம் கற்பிக்க ஆசிரியர் தேவை. விண்ணப்பிக்கவும்: இல 140, பலாலி வீதி, திருநெல்வேலி. [22756]

### ஆண்டு 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond, Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3539]

ஆண்டு 5 இல் கல்வி கற்கும் மாணவர்களுக்கு பிரபல பாடசாலைகளுக்கான மாதிரி அனுமதிப் பரீட்சை (தமிழ், கணிதம், ஆங்கிலம்) 04 - 10 - 1992 ஞாயிறு முற்பகல் 8-00, முற்பகல் 11-00 மணி நேரங்களில் நடைபெறும். வெளி மாணவரும் தோற்றலாம். புதிய கல்வி நிலையம், 219, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் [22744]

### மாதிரி-வினாத்தாள்கள்

O/L வகுப்புகளிற்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் (சைவம்/ றோ. க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் (விடைகளுடன்) மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road, Jaffna. (சி/3541)

### மிருதங்கப் பயிற்சி

மிருதங்க வாத்தியத்தின் தொழில் நுணுக்கங்கள் யாவும் இலவசமாக, விஜயதசமியன்றிலிருந்து கற்பிக்கப்படும். விரும்பிய யாவரும் நேரில் வரலாம். ஆசிரியர் கோவிந்தபிள்ளை விஜயகுமார், 192/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [22706]

### இசை வகுப்புகள்

யாழோசையின் இசை வகுப்புகள் புல்லாங்குழல், வயலின், ஓகன், கிற்றார் ஆகிய பாடங்கள் 05 - 10 - 92 (திங்கள்) விஜயதசமி அன்று மாலை 5-00 மணிக்கு ஆரம்பிக்கப்படும். யாழோசை, இல. 61, பருத்தித்துறை வீதி, கொணப்பதி. [22691]

### ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute. 582, Stanley Road, Jaffna (சி 3540)

### றோணியோ

தரமான முறையில் குறித்த தவணையில் றோணியோ செய்து கொடுக்கப்படுகிறது. ஒரு பிரதி ரைப்பிங் ரூபா 8/-; றோணியோ 100 பிரதிகளுக்கு ரூபா 30/- அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, வெலிங்டன் சந்தி, கலை, வர்த்தகக் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம். (சி-3546)

### BRIDE WANTED

Jaffna Hindu Parents Seeks for Son 29 years mars afflicted Studying in London with Visa Suitable Bride, Beautiful. Educated with English Knowledge below 26 years. below 5'2'', mars afflicted in Jaffna, Colombo, or London. Marriage in Ceylon. Dowry no barricade. No. 451, C/O Uthayan Jaffna. (22758)

### O/L கணிதம்

ஆசிரியர் சச்சிதானந்தவின் கணிதம் உதவி நூல் வரிசைகள், மடக்கைகள், விருத்திகள், புள்ளி விபரவியல், திரிகோண கணிதம், மாதிரி வினாத்தாள்களும், செய்கைகளும் ஒவ்வொன்றும் ரூபா 20-00. மாணவர்கள் தாமாகவே மீட்டலை மேற்கொள்ள சிறந்த நூல்கள். [4983]

### கல்வி

G.C.E. (O/L) இல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தில் இதுவரை சித்தி அடையாதவர்களுக்கும், ஆரம்ப அறிவே இல்லாதவர்களுக்கும் 25 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 பணித்தியாலத்தில் விசேட சித்திக்குக் கற்பிக்கப்பட்டு Section & Portion Revision உடன் Past Papers Practice உம் அளிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, கோவேந்திரா வீதி, சுண்டிக்குளி (22675)

## 60 குடும்பங்களுக்கு உலர் உணவு உதவி

இடம்பெயர்ந்து குருநகர் புனித யாகப்பர் ஆலய சுற்றாடலில் தங்கியுள்ள 60 குடும்பங்களுக்கு யாழ். மறைவட்ட மனிதமுன்னேற்ற நடுநிலையம் உலர் உணவு, பால்மா வகைகளை நிவாரணமாக வழங்கி வருகிறது.

மாதகல், சில்லாலை, பண்டத்தரிப்பு, இளவாலை பகுதிகளிலிருந்து இராணுவ நடவடிக்கைகளினால் இடம்பெயர்ந்து இப்பகுதிகளில் தங்கியுள்ளோருக்கே இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன. (த-ம-51)

வெளிவந்துவிட்டது!

**மனைப்பொருளியல்**

(ஆண்டு 10—11)

மாதிரிகை

வினா-விடை

ஆக்கம்:

செல்வி

**யசோதா துரைசிங்கம்**

**ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை**

யாழ்ப்பாணம். [22759]

## வாணிவிழா - வித்தியாரம்பம்

யாழ் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தினரின் வாணி விழா வைபவம் இன்று 04 - 10 - 92 (ஞாயிறு) காலை 9-00 மணிக்கும் வித்தியாரம்பம் 5 - 10 - 92 திங்கள் மாலை 4-00 மணிக்கும் மன்ற மண்டபத்தில் (நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் தெற்கு வீதி) நடைபெறும்.

★ இசை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

★ அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

செயற்குழு,

நல்லூர். யா. அ. இ. த. மன்றம். [22762]

## தளபாடங்களுக்கான கூறுவிலை கோரல்

### பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை

இதன் கீழ் விவரப்படியான தளபாடங்களைச் செய்து இவ் அலுவலகத்தில் ஒப்படைப்பதற்கான அரக்கு முத்திரையிடப்பட்ட கூறுவிலைகள் பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாகக் கோரப்படுகின்றன.

1. கூறுவிலைகள் 19-10-1992ஆம் திகதிக்கு முன்னர் விசேட ஆணையாளர், பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை என்னும் முகவரிக்கு நேரிலோ, பதிவுத் தபால் மூலமோ சேர்ப்பிக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'தளபாடங்களுக்கான கூறுவிலை' எனக்குறிப்பிடுதல் வேண்டும்.
2. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்தகாரர் கேள்விக்காரர்கள் அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் குறித்த தளபாடங்களைச் செய்து ஒப்படைக்க வேண்டும். அத்துடன் சபையுடன் ஒப்பந்தம் ஒன்றையும் செய்து கொள்ள வேண்டும்.
3. மேலதிக விபரங்களையும், மாதிரிப்படம் மற்றும் அளவுப் பிரமாணங்களையும் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.
4. போதிய காரணங்களுக்காக கேள்விகளைப் பின் போடவோ, நிராகரிக்கவோ விசேட ஆணையாளருக்கு பூரண அதிகாரம் உண்டு.

### தளபாட விவரம்

1. கண்ணாடி அலுமாரிகள்
2. சஞ்சிகை றாக்கை
3. நோயாளர்களைப் பரிசோதனை செய்யும் கட்டில்
4. சாதாரண கதிரைகள்
5. கை வாங்குகள்

செல்வி குணசுந்தரம் அன்னமயில்,
விசேட ஆணையாளர்,
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை,
பளை.

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபை,
பளை,
28 09-1992. [சி-3440]

## 3 ப.நோ.கூ. கிளைகள் உடைக்கப்பட்டு கொள்ளை

மயிலணி, அக். 4

சுன்னாகம் பல நோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் மூன்று கிளைகள் உடைக்கப்பட்டு பல்லாயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் இரவு வேளையில் கொள்ளையிடப்பட்டுள்ளன.

28 ஏ. இலக்க விற்பனை நிலையக் கிளையும், ஏழாலை தெற்குப் பகுதியில் உள்ள இரண்டு கிளைகளுமே உடைக்கப்பட்டுக் கொள்ளையிடப்பட்டுள்ளன. (ம-89)

Pure/App.

**Mr, குணசிங்கம்**

B.Sc. (Hons)

★ DAY REVISION & - PAPER ★

ஆரம்பம்:

**06-10-92**

11a m

**சயன்ஸ் சென்ரர்,**

எழிலகம் முன்,

யாழ்ப்பாணம். [சி-3443]

## 93 A/L, 94 A/L

Day Classes
Paper Classes
Theory Classes

நடைபெறுகின்றன

PHY. — திரு: ரவீந்திரநாதன் B. Sc. (Cey.)- Dip-in-Ed.

CHE. — திரு: செல்வா B. Sc. (Hons.)

BOT. — திரு - பாலசுப்பிரமணியம்

ZOO. — திரு: ஈஸ்வரதாசன் B. Sc. (Cey.)

PUR/APP. — திரு: குணசிங்கம் B. Sc. (Hons.)

**சயன்ஸ் சென்ரர்**

எழிலகம் முன்

யாழ்ப்பாணம். [சி-3442]

## தென்னிந்திய திருச்சபை யாழ். அத்தியட்சாதீனம்
## சிறுகைத்தொழில் பயிற்சி நிலையம்

ஆரம்ப வகுப்பு: 28 - 10 - 1992 காலை 9 மணி

இடம்: வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்திலுள்ள செல்லையா விடுதி மண்டபம்.

பயிற்றப்படும் தொழிற் கல்வி:

★ தையல் ★ பன்ன வேலை ★ தும்புவேலை
★ கைப்பணி ★ வீட்டுப்பணி
★ சிகை அலங்காரம் ★ கேக் ஐசிங்

ஆறு மாத பயிற்சி முடிய சான்றிதழ் வழங்கப்படும். பயிற்சி வகுப்பிற்கான விண்ணப்ப படிவங்களை தென்னிந்திய திருச்சபை காரியாலயம், வட்டுக்கோட்டையிலும், பயிற்சி நிலையத்திலும் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி: 26 - 10 - 1992 க்கு முன் எமக்கு விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைக்கவும்.

முகாமையாளர் / ஆசிரியர்.

தென்னிந்திய திருச்சபை-
காரியாலயம்,
வட்டுக்கோட்டை. [சி-3445]

## பாராட்டு விழா



பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்
சிவத்தமிழ் வித்தகர்

★ **சிவமகாலிங்கம்** ★

(B. A. Dip. Ed.) அவர்களுக்கு
பாராட்டு விழா

இடம்: கொக்குவில் பொற்பதிப் பிள்ளையார் கோவில்.

காலம்: 05 - 10 - 1992 திங்கள் இரவு 7மணி

வரவேற்புரை: ஆசிரியமணி ஆர். சி. சுப்பிரமணியம்

பாராட்டுபவர்கள்: திரு. கா. மாணிக்கவாசகர், (யாழ். அரசாங்க அதிபர்)
திருமதி யோகேஸ்வரி மாணிக்கவாசகர்,
திரு. ஆ. மகாலிங்கம், (நல்லூர் உதவி அரச அதிபர்).

இத் தலத்தில் 19 தினம் தெய்வீக உரை நிகழ்த்திய சிவத்தமிழ் வித்தகர் அவர்களைக் கௌரவிக்க அனைவரும் திரண்டு வருக! பயன் பெறுக!!

இங்ஙனம்:
பிரம்ம ஸ்ரீ ந. தியாகராஜக் குருக்கள்,
(ஆலய தர்மகர்த்தா)

மேற்படி தேவஸ்தானம்,
கொக்குவில்.

விளம்பர அன்பளிப்பு: திரு. ம. சிவப்பிரகாசம்.

(சி-3441)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

## உதயன்

### நேற்றைய பணியுடன் இன்றைய பணி

ஓர் இனத்தின் மேன்மையும், உண்மையும் மறைக்கப்பட்ட வரலாற்றை அந்த இனம் ஏற்றுக்கொண்டு கற்கின்ற நிலை ஏற்பட்டால், அந்த இனம் அழிந்து போவதற்கு வேறு எந்தக் காரணமும் தேவையில்லை; அது ஒன்றே போதுமானது.

தமிழ் மாணவர்களுக்கென எழுதப்பட்ட "ஆண்டு 9 —வரலாறு" நூலை வெளியிட்டு உரை நிகழ்த்திய தமிழீழ விடுதலைப் புலிகள் கல்விப் பொறுப்பாளர் திரு. இளங்குமரன் இவ்வாறு தெரிவித்திருந்தார்.

அந்தக் கருத்து முற்றிலும் சரியானதே. ஈழத் தமிழ் இனம் இன்று இத்தனை சீரழிவுகளையும் எதிர்நோக்குவதற்கான காரணங்களில் அதுவும் ஒன்றே.

ஈழத் தமிழர்களின் வரலாறு பதிவு செய்யப்படவில்லை. பொய்யோ, புனைகதையோ சிங்களவர் மகாவம்சத்தை எழுதி வைத்தார்கள். ஆனால் தமிழர்கள் தமது வரலாற்றை எழுதத் தவறிவிட்டார்கள். தமது மகாவம்சத்தை வைத்துக்கொண்டு சிங்களக் கல்விமான்கள் தமிழர்களின் வரலாற்றை திரித்தும், மேன்மையையும் நாகரிக வளர்ச்சியையும் மறைத்தும் மகிமை குன்றச் செய்துள்ளனர்.

இலங்கையின் தேசியம் அல்லது இலங்கையின் வரலாறு என்ற போர்வையில் தமிழ் மாணவர்களுக்கே திரிக்கப்பட்டதும், மறைக்கப்பட்டதுமான தமிழர் வரலாறே புகட்டப்பட்டது. இலங்கையின் வரலாறு என்ற இரும்புத் திரையினால் தமிழர் வரலாறு மூடி மறைக்கப்பட்டது. இதனை வரலாறு படித்த தமிழர்கள் எல்லோரும் இப்போது ஒப்புக் கொள்கிறார்கள். தாம் ஏமாற்றப்பட்டதை உணர்கிறார்கள்.

ஆனால் இனியும் தமிழர்கள் அவ்வாறு ஏமாற்றப்படுவதற்கு இடம் கொடுக்கலாகாது இலவச பாடநூல் என்ற பெயரில் கடந்த பத்து வருடங்களில் அரசாங்கம் வெளியிடும் பாடநூல்களில், தமிழ் மாணவர்களுக்கு அவர்களின் மூதாதையினரின் வரலாறு எதுவுமே தெரியாதவாறு மறைக்கப்படுகிறது. அல்லது வேண்டும் என்றே திரிக்கப்பட்ட பொய் நிகழ்வுகள் ஊட்டப்படுகின்றன.

இதனை தடுக்கும் விதத்தில் தமிழ் மாணவர்கள் தமது மூதாதையரின், உண்மையான வரலாற்றைத் தெரிந்து கொள்ளும் விதத்தில் தமிழ் அறிஞர்களாலேயே நூல்தன் எழுதப்படுவது வரவேற்கத்தக்கதாகும். அது இன்றைய அவசிய தேவையுமாகும். எப்போதுமே செய்யாதிருப்பதை விட சற்றுப் பிந்திச் செய்வது பரவாயில்லை எனலாம்.

"வரலாறு" நூல்கள் மட்டுமன்றி, தமிழர் பண்பாடு, வரலாறு, கலைகள் ஆகியன பின்புலங்களாக அமைந்திருக்க, தமிழ் மாணவர்களுக்கான சகல பாட நூல்களும் தமிழராலேயே எழுதப்பட வேண்டும்.

அப்போதுதான் தமிழ் மாணவர்கள் தாம் யார்; தமது பாரம்பரியம் என்ன; நாகரிகம் என்ன; இப்போது தாம் எங்கே நிற்கிறார்கள் இனி மேற்கொண்டு என்ன செய்ய வேண்டும் என்பனவற்றை உணர்ந்து கொள்ள வாய்ப்பு உண்டாகும்.

ஒரு தமிழ் மாணவனிடம்; தான் தமிழன் என்ற உணர்வும், இனப்பற்றும், மொழிப்பற்றும், மண்பற்றும் ஏற்படவேண்டுமானால் அவன் தமிழர் வரலாற்றை அறிந்திருக்க வேண்டும். அதற்கேற்ற வகையில் தமிழ்ப் பகுதிப் பாடசாலைகளின் பாடத்திட்டங்கள் மாற்றப்பட வேண்டும்.

ஈழத் தமிழர் வரலாறு இனியாவது எழுதப்படவேண்டும். நேற்றைய வரலாற்றை இன்று எழுத முடியாது என்பதல்ல. வரலாற்று அறிஞர்கள் நினைத்தால் அது இயலும். அது மட்டுமன்றி நாளை வரலாறாகப் போகும் இன்றைய நிகழ்வுகள் ஆகக் குறைந்தது இந்த நூற்றாண்டின் நிகழ்வுகளேனும் தொகுக்கப்பட்டு ஈழத்தமிழர் வரலாறு எழுதப்பட வேண்டும். நேற்று இயற்றாது விட்ட பணியை இன்று செய்வதுடன் மட்டுமன்றி, நாளைக்கான இன்றைய பணியும் இப்போதே செய்யப்படுதல் அவசியமாகும்.

---

## பூமியதிர்ச்சி நடவடிக்கையினால்

# பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு

# உதவ புதிய நிவாரணத் திட்டம்

### தயாரிக்கும்படி அரச அதிபர் கோரிக்கை

யாழ்ப்பாணம், அக். 4

'ஒப்பரேஷன் பூமியதிர்ச்சி' இராணுவ நடவடிக்கையால் இடம்பெயர்ந்துள்ள வலிவடக்கு— தெற்குப்பகுதி மக்களில் பெரிதும் பாதிக்கப்பட்ட குடும்பங்களை இனம் கண்டு அவர்களுக்கு உதவவும்—

மற்றும் களுத்துறை, மாஸின் போன்ற சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களது குடும்பங்களில் மிகவும் வறிய நிலையில் வாடும் குடும்பங்களை இனங்கண்டு உதவவும் புதிய நிவாரணத் திட்டம் ஒன்றைத் தயாரிக்குமாறு யாழ். அரச அதிபர் திரு. சா. மாணிக்கவாசகர் யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்; செயலகத்தில் யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையப் பிரதிநிதிகள் கலந்துகொண்ட கூட்டத்தில் வைத்து அரச அதிபர் இக்கோரிக்கையை விடுத்தார்.

ஒப்பரேசன் பூமியதிர்ச்சி நடவடிக்கையின்போது இடம்பெயர்ந்த குடும்பங்களில் — தமது பிரதான குடியிருப்பாளரை அல்லது உழைப்பாளியை இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் விட்டு வெளியேறிய — அதிக அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பங்கள் தற்சமயம் வறுமையில் வாடுவதாகவும் — அவர்களுக்கு வழங்கப்படும் அரச நிவாரணம் போதாது என்றும் —

எனவே அவ்வாறான குடும்பங்களை இனங்கண்டு உதவ நிவாரணத் திட்டம் ஒன்றைத் தயாரித்து செயற்படுத்துமாறு அவர் கோரினார்.

அதேவேளை படையினரிடம் பிடிபட்டு சிறை வைக்கப்பட்டுள்ளோரின் குடும்பங்கள் பல குடாநாட்டில் உள்ளதாகவும், அவர்கள் இடம் பெயராத நிலையில் இருந்தால் அவர்களுக்கு அரச நிவாரணம் கிடைக்காது என்றும் — எனவே அவ்வாறான குடும்பங்களையும் பாதிக்கப்பட்ட குடும்பங்களாகக் கருதி அவர்களுக்கு உதவ வேண்டும் என்றும் அரச அதிபர் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் வேண்டுகோள் விடுத்தார். (த-5)

---

## முதலாம் ஆண்டு விழா

சுழிபுரம் 'சமுத்திரா' உற்பத்தி நிலையத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நாளை திங்கட்கிழமை காலை 10 மணிக்கு தொழிற்சாலை வளவில் நடைபெறும். (த-ம)

## ஜப்பான் இளவரசர் இலங்கை விஜயம்

ஜப்பான் இளவரசர் அக்கிஷினோவும் இளவரசியும் இலங்கை வரவுள்ளனர்.

இவர்கள் நவம்பர் 6ஆம் திகதி கொழும்பு வந்து 8ஆம் திகதிவரை இங்கு தங்கியிருப்பர். (த-ம)

---

## வட-கிழக்கு பிரச்சினைக்கு

# அரசியல் தீர்வு ஒன்றையே நான் மிக விரும்புகின்றேன்

### வடபகுதி ராணுவத் தளபதி சொல்கிறார்

'வடக்கு-கிழக்கு பிரச்சினைக்கு அரசியல் ரீதியிலான ஒரு தீர்வு ஏற்படுவதையே நான் பெரிதும் விரும்புகின்றேன்.'

இப்படிக் கூறுகிறார் வடபகுதிக்கான இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் ஜெரி சில்வா.

கொழும்புப் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றிலேயே அவர் இப்படிக் கூறியுள்ளார்.

அப்பேட்டியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

நான் ஒரு தீர்வு ஏற்பட வேண்டும் என்பதையே மிகவும் விரும்புகின்றேன். இப்போராட்டம் எவ்வளவு தூரம் நீடிக்கும் என திட்டவட்டமாக என்னால் எதனையும் கூறிவிட முடியாது; ஒரு சந்ததியிடமிருந்து இன்னுமொரு சந்ததிக்கு இப்போராட்டம் கைமாறும் நிலை ஏற்படக் கூடாது என்பதையே நான் விரும்புகின்றேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீது ஓர் இராணுவ ரீதியிலான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தி அவர்களை ஒரு தீர்வுக்கு உடன்படச் செய்வதே எமது முக்கிய நோக்கமாகும்.

இந்தியப் படைகள் இங்கு வந்து சண்டையில் குதித்து சுமார் 40 தினங்களில் வடபகுதியை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தன. ஆனால் அப்படைகள் தொடர்ந்து நிலை கொண்டிருந்த இரு வருட காலங்களிலும் போராட்டத்தை நடத்திய வண்ணமே இருந்தன— என்றார் அவர். (த-ம-3-162)

---

## சிங்கப்பூரில் அநாதரவாக விடப்படும் தமிழர்கள்

கொழும்பு, அக். 4

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புப் பெற்றுத்தருவதாக ஏமாற்றி கூட்டிச் செல்லப்பட்ட பெருந்தொகையான இலங்கை இளைஞர்களும், யுவதிகளும் சிங்கப்பூரில் அநாதரவாக விடப்பட்டுள்ளதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இவர்களை கொழும்பிலிருந்து கூட்டிச்செல்லும் வேலைவாய்ப்பு முகவர்கள் சிங்கப்பூர் சென்றதும் போலிக் காரணங்களைக்கூறி இவர்களை விடுதிகளில் தங்கவைத்து விட்டு தலைமறைவாகி விடுகின்றனராம்.

இந்த முகவர்கள் இவர்களை சிங்கப்பூருக்கு அழைத்துச் செல்வதற்கு கொழும்பில் வைத்து ஒருலட்சம் ரூபா வரையில் கட்டணம் அறவிடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிங்கப்பூரில் இவ்வாறு அநாதரவாக விடப்பட்டவர்கள் தம்வசமுள்ள பணத்தை விடுதிக் கட்டணமாக செலுத்திவிட்டு அங்கிருந்து வெளியேறிபின்னர் தங்குமிடம் மற்றும் உணவு வசதிகளின்றி அலைந்து திரிவதாகவும் கூறப்படுகிறது.

இவ்வாறு சிங்கப்பூரில் அநாதரவாக விடப்படும் இலங்கையர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள் என்றும்— அவர்களில் பெரும்பாலானோர் யுவதிகள் என்றும் தெரிவிக்கப்பட்டது;

இவர்கள் தாம் ஏமாற்றப்பட்டது பற்றி சிங்கப்பூரிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் முறைப்பாடு செய்வது இப்போது ஒரு சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டதெனவும்; தெரிவிக்கப்படுகிறது. (ம-த)

---

## இந்திய விஜயத்தை முடித்து பிரேமா பூட்டான் சென்றார்

ஜனாதிபதி பிரேமதாஸவும் திருமதி ஹேமா பிரேமதாஸவும் இந்தியாவுக்கான 3 நாள் விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று பூட்டானின் தலைநகரான திம்புவுக்குப் போய்ச்சேர்ந்தார்கள்.

பூட்டான் மன்னரும் அரசியும் ஜனாதிபதியையும் பாரியாரையும் விமான நிலையத்தில் வரவேற்றனர்;

பூட்டான் மன்னருக்கும் ஜனாதிபதி பிரேமதாஸவுக்கு மிடையில் நேற்று மாலை பேச்சுவார்த்தை ஆரம்பமானது.

"சார்க் நாடுகளுக்கான தனது விஜயத்தின் அடுத்த கட்டமாக ஜனாதிபதி பிரேமதாஸ இன்று காலை பங்களாதேஷ் செல்வார்."

[உ-ம-10]

---

## யாழ். மாநகரப் பகுதியில் 12 புதிய குழாய்க் கிணறுகள்

யாழ். மாநகரப் பகுதியில் குடிதண்ணீர் விநியோகத்தை சீர் செய்யும் வகையில் புதிதாக 12 குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன;

இவற்றில் இரண்டை யாழ். மாநகரசபை அமைக்கும். ஏனைய 10 கிணறுகளையும் அமைக்கும் செலவை 'யுனிசெப்' ஏற்றுக் கொள்ளும்;

எழிலூர், திருநகர், மகேந்திரபுரம், ஜின்னா ச.ச. நிலையப்பகுதி, பாசையூர், நாவாந்துறை, அரியாலை முத்திரைச் சந்தி, கணேசன் தோட்டப் பகுதி, கொழும்புத்துறை, ஈச்சமோட்டை ஆகிய இடங்களிலேயே இக்குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன;

இவை தவிர மேலும் பல குழாய்க்கிணறுகளை அமைப்பதற்கும் யாழ்; மாநகரசபை [illegible] யுள்ளது; (த-ம-3-17)

### நாளை தேர்த்திருவிழா

சமித்திரப் பிரசித்தி வாய்ந்த வல்லை ஸ்ரீ வெங்கடேச வரதராஜப் பெருமாள் கோவில் ஆலய சித்திரத் தேரோட்டம் நாளை திங்கட்கிழமை காலை 9.15 மணிக்கு நடைபெறும்.

தீர்த்தத் திருவிழா நாளை மறுதினம் காலை [illegible] இடம் பெறும். (த-51)

---

## இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே வழியாகும்

### பீட்டர் கெனமன் சொல்கிறார்

கொழும்பு, அக்: 4

அரசியல் தீர்வொன்றின் மூலமே இலங்கையின் இனப்பிரச்சினையை தீர்க்க முடியும்.

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான பீட்டர் கெனமன் இவ்வாறு கூறினார்.

பீட்டர் கெனமனின் பிறந்த தின வைபவம் நேற்று கொழும்பில் நடைபெற்றது; அங்கு உரையாற்றுகையிலேயே அவர் இக் கருத்தினை வெளியிட்டார்;

இங்கு இப்போது ஒரு சிவில் யுத்தம் நடந்து கொண்டிருக்கிறது. சிலர் இராணுவத்தால் பிரச்சினையை தீர்த்துவிடலாம் என்று எண்ணுகின்றனர். அது ஒரு போதும் முடியாது. அரசியல் தீர்வே விமோசனத்தைத் தர முடியும் — அதுவே இறுதியானதும் ஆகும் — என்றும் அவர் மேலும் சொன்னார்; (த-ம)

---

## இன்று நடைபெறவிருக்கும் தாச்சி, உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், அக்; 4

யாழ். மாவட்டத்தில் மேஜர் முரளி ஞாபகார்த்தமாக நடைபெற்று வரும் விளையாட்டு விழா நிகழ்ச்சிகளில் இன்று காலை 9 மணி முதல் திருநெல்வேலி முத்துத்தம்பி மகாவித்தியாலய மைதானத்தில் — தாச்சிப் போட்டிகள் — இரண்டாவது நாளாக நடைபெறும். மாலை உதைபந்தாட்டப் போட்டிகள் யாழ்; பல்கலைக் கழக மருத்துவ வளாக மைதானத்தில் இடம்பெறும்.

**ஆண்களின் பிரிவு**

★ கைதடி கொத்தணி எதிர் சதுமலை வடக்கு த.க. பாடசாலை

★ மண்டைதீவு கொத்தணி எதிர் குடத்தனை கரையூர் றோ. க; பாடசாலை;

★ அல்வாய் சின்னத்தம்பி ம. வி. எதிர் கோண்டாவில் இந்து;

**பெண்கள் பிரிவு**

★ அல்வாய் சின்னத்தம்பி ம; வி. எதிர் அரசடி சைவப் பிரகாச வித்தியாலயம்.

★ கோண்டாவில் கொத்தணி எதிர் நல்லூர் கொத்தணி.

**உதை பந்தாட்டம்**

மருத்துவ வளாக மைதானத்தில் இன்று மாலை 3 மணிக்கு உதைபந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகும்;

★ புனித சம்பத்திரிசியார் கல்லூரி எதிர் உரும்பிராய் இந்து.

★ நெல்லியடி ம. வி: எதிர் ஹென்றியரசர் கல்லூரி

---

## மன்னார் அரச அதிபர் கூட்டும் முக்கிய மாநாடு

மன்னார், அக். 4

மன்னாரில் இராணுவ நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, மன்னார் அரசாங்க அதிபர் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முக்கியமான மாநாடு ஒன்றை நடத்தவிருக்கிறார்;

மன்னார் மாவட்டத்தில் உள்ள உதவி அரசாங்க அதிபர்கள், மற்றும் பகுதித் தலைவர்களை செயலகத்தில் நடக்கவிருக்கும் பிரஸ்தாப முக்கிய மாநாட்டுக்கு தவறாது வருமாறு அதிபர் அழைத்திருப்பதாக அறியவருகிறது.

மீளக் குடியமர்த்தல், வியாபாரம், வீடமைப்பு, சுகாதாரம், உணவு விநியோகம், போக்குவரத்து உட்பட பல விடயங்கள் இந்த மாநாட்டில் ஆராயப்பட இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மன்னார் கச்சேரியில் நடக்கவிருக்கும் இந்த மாநாட்டில் தள்ளாடி இராணுவ முகாமைச் சேர்ந்த இணைப்பதிகாரியும் கலந்து கொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறதாம். (அ-10)

---

## இனப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு ஏற்பட வேண்டும்

### இந்தியப் பிரதமர் ராவ்

புதுடில்லி, அக்: 4

இலங்கை இனப்பிரச்சினைக்கு விரைவில் ஒரு தீர்வு ஏற்படுவதையே இந்தியா விரும்புகிறது;

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் இவ்வாறு தெரிவித்தார். இந்தியாவுக்கு விஜயம் செய்த இலங்கை ஜனாதிபதிக்கு விருந்துபசாரம் வழங்கிக் கௌரவித்த வைபவத்தில் பேசும் போதே இந்தியப் பிரதமர் இவ்வாறு சொன்னார்;

ஜனாதிபதி பிரேமதாஸா அங்கு பேசுகையில்; இழுத்தடித்துக்கொண்டிருக்கும்பிரச்சினைகளைக் கையாள்வதற்கு புதிய வழிமுறைகளைக் காண வேண்டியுள்ளது என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய நவராத்திரி நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், அக். 4

நவராத்திரி விழாவில் சரஸ்வதி பூஜை இறுதி நாள் இன்றாகும். இன்று பல இடங்களில் சரஸ்வதி விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது.

நாளை தினம் விஜயதசமி கொண்டாடப்படும். சிறுவர்களுக்கு நாளை பி. ப. 1.1 மணிக்குப் பின்னர் பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் வித்தியாரம்பம் செய்யப்படும்.

நாளை மாலை ஆலயங்களில் மானம்பு திருவிழா நடைபெறும்.

* * *

யாழ். அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தினர் நடத்தும் வாணி விழா இன்று முற்பகல் 9 மணிக்கு நல்லூர் பண்டாரக்குளம் பிள்ளையார் கோவில் தெற்கு வீதியில் அமைந்துள்ள மன்ற மண்டபத்தில் நடைபெறும்.

யாழ். மாநகர ஆணையாளர் திரு பொ. பாலசிங்கம் கௌரவ விருந்தினராகக் கலந்து கொள்கிறார். விழாவில் இசைக் கச்சேரிகளும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, நாளை திங்கள் மாலை 4 மணிக்கு மன்ற மண்டபத்தில் வித்தியாரம்பமும் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ் நாவலர் வீதி, புதிய கல்வி நிலைய வாணி விழா இன்று பி. ப. 2 மணிக்கு மேற்படி கல்வி நிலையத்தில் நடைபெறும்.

பிரஸ்தாபவிழாவில் வைத்து ஆண்டு - 5 புலமைப் பரிசில் பயிற்சி நூலும் வெளியிடப்படும்.

★ ★ ★

திருநெல்வேலி, சைவ வித்தியா விருத்திச் சங்க சிறுவர் நிறைவாழ்வு இல்ல நவராத்திரி விழாவில் நல்லை ஆதீன முதல்வர் குருமகாசந்நிதானமும், துர்க்கா துரந்தரி சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியும் கலந்துகொள்ளவுள்ளனர். மற்றும் பலரின் சொற்பொழிவுகளும், சிறப்பு நிகழ்ச்சியாக பரத நாட்டியமும் இடம்பெறும்.

★ ★ ★

மானிப்பாய் இந்து சமய விருத்திச் சங்கத்தினரின் நவராத்திரி விழா இன்று பி. ப. 2.30 மணிக்கு மானிப்பாய் இந்துக்கல்லூரி வாகீசர் மண்டபத்தில் நடைபெறும்.

மானிப்பாய், நவாலி, கதுமலை, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய்ப் பகுதிகளின் பண்ணிசை மாணவர்களின் பண்ணிசை சிறப்பு நிகழ்ச்சியாக இடம்பெறும். பண்டிதர் நா. இராசையா ''வாணிபதம் நாடு'' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

★ ★ ★

மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் ஆதரவில் மன்ற மண்டபத்தில் இன்று பி. ப. 4 30 மணிக்கு வாணி விழா நடைபெறும்.

★ ★ ★

சரணவாய் மதி கருணை யம்பதி சனசமூக நிலைய ஆதரவில் நிலைய முன்றலில் இன்று மாலை நவராத்திரி விழா நடைபெறும்.

இவ்விழாவில் வைத்து ஜி. சி. ஈ. சாதாரண, உயர்தரப் பரீட்சைகளிலும், புலமைப் பரீட்சைகளிலும் சிறப்பாகத் தேறியவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

★ ★ ★

சுன்னாகம் ஸ்ரீகதிரமலை சிவன் தேவஸ்தான நவராத்திரி விழாவில் இன்று மாலை விசேட பூசையும், பஜனைகளும், சொற்பொழிவுகளும் நடைபெறவுள்ளன.

இங்கு வசந்த மண்டபத்தில் அலங்காரக் கொலு வைக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

★ ★ ★

சாவகச்சேரி நகரசபை நலன்புரி சங்கத்தினரின் நவராத்திரி விழா இன்று காலை 10 மணிக்கு நகரசபை பொது நூலகத்தில் நடைபெறும்.

சாவகச்சேரி நீதிபதி திரு. மு. திருநாவுக்கரசு ''நவராத்திரி மகிமை'' என்னும் பொருளில் உரையாற்றுவார்.

★ ★ ★

யாழ். பாரதி இளைஞர் அறிவியற் கழகத்தினரின் நவராத்திரி விழா இன்று கழக மண்டபத்தில் நடைபெறும்.

கழக அங்கத்தவர்களின் பட்டி மன்றமும், கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெறும்.

★ ★ ★

யாழ் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் செல்வி கிருஷ்ணவேணி மயில்வாகனத்தின் மாணவ மாணவிகளின் இசை நிகழ்ச்சி இன்று காலை 8.30 மணிக்கு நடைபெறும்.

சங்கீத பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு சு. கணபதிப்பிள்ளை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

★ ★ ★

திருநெல்வேலி சைவத் தொண்டர் நிலையத்தினரின் வாணி விழா இன்று பி. ப. 8 மணிக்கு நிலைய மண்டபத்தில் நடைபெறும்.

★ ★ ★

மானிப்பாய் மருதடி விநாயகர் நவராத்திரி விழாவில் விநாயகர் பூசையும், சக்தி பூசையும் இன்று பி. ப. 4.30 மணிக்கு நடைபெறும்.

திருமுறைப் பண்ணிசையும் நடைபெறும். [அ-5-15-39-89-17-165-117-28]

# இராணுவத்துக்கு ஏற்பட்ட...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எட்டினர்.

இரு தரப்பும் நடத்திய பேச்சுவார்த்தையின் போக்கும், எட்டப்பட்ட முடிவுகளும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும், அதிபர் பிரேமதாஸாவுக்கும் அன்றாடம் தெரிவிக்கப்படுகின்றன.

போர் நிறுத்தத்துக்கென இந்த 4 உறுப்பினர் குழு தயாரித்திருக்கும் நடைமுறைச் சாத்தியமான திட்டத்தில் இரண்டு முக்கிய அம்சங்கள் வலியுறுத்தப்படுகின்றன.

## இரு முக்கிய அம்சங்கள்

ஒன்று— இராணுவம் இப்போது நிறுத்தப்பட்டுள்ள இடங்களைத் தவிர புதிய இடங்களில் தளங்கள் அமைப்பதோ முகாம் நிறுவுவதோ கூடாது; மறைந்திருந்து தாக்குவது கைவிடப்படவேண்டும்.

இரண்டு— பேச்சுவார்த்தை முக்கியமான கட்டத்தை அடைந்திருப்பதால் தொடர்ந்து இந்த 4 பேர் குழுவே பேசவேண்டும். புது முகங்களை பேச்சுவார்த்தைக்கு அழைத்து வரக்கூடாது.

அரசின் சார்பில் பேசும் வீரக்கோனும், திலகரத்னவும் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

புலிகளின் திடீர்த் தாக்குதலில் இராணுவத்துக்குப் பலத்த சேதம் ஏற்படுவதால் பொதுமக்களிடையே இராணுவத்தினருக்கு மதிப்புக் குறைந்து வருகிறது: எனவே ஸ்ரீலங்கா அரசு பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களையும் பிறவற்றையும் சேகரிக்க போர் நிறுத்த காலத்தைப் பயன்படுத்தத் திட்டமிட்டுள்ளனர்.

எனவே அவர்களும் பேச்சுவார்த்தைக்குச் சம்மதம் வெளியிட்டுள்ளனர்.

இந்தியா விடுதலைப் புலிகளுக்குத் தடை விதித்து விட்டதால், இந்தப் பேச்சுவார்த்தை குறித்துக் கருத்துத் தெரிவிப்பது இந்தியாவுக்குக் கஷ்டமாகவே இருக்கும்; — என்று தெரிவிக்கப்பட்டது.

## மறுப்பு

இதேவேளை —

மேற்குலக நாடுகளின் ஏற்பாட்டில் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருப்பதாக கடந்த மாதம் மூன்றாம் வாரத்தில் செய்திகள் வெளியானதும் —

அதனை விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வப் பேச்சாளர் ஒருவர் முற்றாக மறுத்ததும் குறிப்பிடத்தக்கவை.

மேற்குலகத் தீர்வுத் திட்டத்தை விடுதலைப்புலிகளின் பிரமுகர் திரு. கிட்டு யாழ்ப்பாணம் கொண்டு வந்து புலிகளின் தலைமைப் பீடத்துடன் அத்திட்டம் குறித்து பேச்சு நடத்தி வருகிறார் என்று வெளியான செய்திகளையும் புலிகளின் அதிகார பூர்வப் பேச்சாளர் திட்டவட்டமாக மறுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் —

விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தை எதிலும் ஸ்ரீலங்கா அரசு ஈடுபடவில்லை என ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா தமது இந்திய விஜயத்தின் போது புதுடில்லியில் வைத்து உறுதி அளித்ததும் குறிப்பிடத்தக்கதாகும்.

## பிரபாவை ..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி பிரேமதாஸா தெரிவித்தாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இந்திய அமைதிப்படை வடக்கு - கிழக்கில் வந்து இறங்கியதை அடுத்து இரு நாடுகளுக்கும் இடையே இருந்து வந்த கருத்து வேறுபாடுகளை புதிய இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் களைந்தெறிய முன்வருவார் என ஜனாதிபதி பிரேமதாஸா நம்பிக்கை வைத்துள்ளார் என்றும் பி. பி. ஸி. தெரிவித்தது. (உ-5)


# வைத்தியசாலை இடம் மாற்றம்

அளவெட்டியில் இயங்கிவந்த

## மயூரா வைத்தியசாலை

தற்போது மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்திற்கு முன்பாக இயங்குகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

டாக்டர். வைத்திலிங்கம் வரதலிங்கம்.

(4986)


# இன்றைய ஆட்டம்

அளவெட்டி, அக்: 4

யாழ். ஈச்சமோட்டை சனசமூக நிலையத்தின் 50 ஆவது ஆண்டு நிறைவையொட்டி நடத்தப்பட்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியின் இறுதியாட்டம் இன்று பிற்பகல் 4 மணிக்கு ஈச்சமோட்டை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

இன்றைய ஆட்டத்தில் கொய்யாத் தோட்ட லிலை யாம்டு கழக அணியை எதிர்த்து கொழும்புத்துறை மேற்கு ஜெற்லைனர்ஸ் கழக அணி மோதும். (த-17)

# இன்று

வடமராட்சி, அக். 4

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் பொலிகண்டி சாந்தன், திக்கம் வளர்மதி பாலர் பாடசாலைகளுக்கான விளையாட்டுப் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1. 30 மணிக்கு சக்கோட்டை புனித சவேரியார் முன்றலில் நடைபெறும். (ஒ-165)

★ ★ ★

யாழ்ப்பாணம். அக். 4

திருநெல்வேலி பாரதி கலா மன்றத்தினரின் ''நாட்டிய விழா'' இன்று பிற்பகல் 8 மணிக்கு யாழ். பல்கலைக் கழக கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

திருமதி ஞானமணி செல்லையாவின் மாணவிகள் நாட்டிய நிகழ்ச்சியில் பங்கு பற்றவுள்ளனர். (ஒ-15)

# இலவச சமய வகுப்பு

யாழ்ப்பாணம், அக். 4

வண்ணை சிவன் கோவிலில் இலவச சைவசமய வகுப்புகள் நடத்தப்பட உள்ளன.

இந்த இலவச சைவசமய வகுப்புகள் விஜயதசமி தினமான நாளை பி. ப. 2. 45 மணிக்கு ஆரம்பமாகும்.

வாழ்க்கையோடு இணைந்த சைவநெறி, நீதிநூல்கள் திருமுறை ஓதும் முறை என்பன போதிக்கப்படும். (அ)

# ஜெயலலிதாவின் எம். எல். ஏ. பதவியை ரத்துச்செய்ய கோரிக்கை

தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் சட்டசபை உறுப்பினர் பதவியை ரத்துச்செய்யுமாறு ஜனதாக் கட்சித் தலைவர் [illegible] கோரியுள்ளார். (ஒ-ம)


உ
சிவமயம்

# பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா பற்றிய நூல்கள் விற்பனைக்கு

★ கீதாவாகினி: பகவத்கீதைக்கு பாபா அவர்கள் தற்காலத்துக்கு ஏற்ற விதத்தில் கூறிய விளக்கங்கள்.
ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டிய நூல்.
விலை ரூபா 60.00

★ அவதார உண்மைகள்: பாபா அவர்கள் அவதரிக்க உள்ளார் என சுக முனிவர் 5800 வருடங்களுக்கு முன் கூறியவையும், அவதாரம் பற்றி புனித பைபிளில் கூறப்பட்டுள்ளவையும், அல்லாவின் சொற்பொழிவில் அவதாரம் பற்றியதும், விஞ்ஞானிகளின் கண்ணோட்டத்தில் பாபா பற்றிய பல விபரங்கள்.
பாபா பற்றி அறிய விரும்புவர்களுக்கு உகந்த நூல்.
விலை ரூபா 25.00

★ அரும்பத விளக்கம்: பாபாவின் பஜனைப் பாடல்களில் இடம்பெறும் பிற மொழிச் சொற்கள் மற்றும் விளங்காத சொற்களுக்கான பொருள் விளக்கம்.
விலை ரூபா 20 00

★ மனித விழுமியங்களுக்கான சத்ய சாயி கல்வித் திட்டம்:
ஆங்கில மூலம்:- திருமதி லொறெயின் பறோஸ் அவர்கள்.
தமிழ்மொழி பெயர்ப்பு:- கலாநிதி சபா. ஜெயராஜா அவர்கள். கல்வியற்புலம், யாழ். பல்கலைக்கழகம்.

விரைவில் வெளிவரவுள்ளது

சுன்னாகம் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பஜனை நிலையத் தலைவர் திரு மா. தேவராசா (நிர்வாகி, உதயன் சேவை நிலையம், சுன்னாகம்) அவர்களின் இல்லை சாயி நிலையத்திலும், மற்றும் சாயி நிறுவனங்களிலும் பிரதிகள் விற்பனைக்குண்டு.

வெளியிடுவோரும் விற்பனையாளரும் } பகவான் ஸ்ரீ சத்திய சேவா நிலையம், பிள்ளையார் கோவில் முன்பாக, தாவடி.

(சி/2510)


# மரண அறிவித்தல்கள்

## திருமதி மரியப்பிள்ளை பொன்னம்பலம்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த திருமதி மரியப்பிள்ளை பொன்னம்பலம் அவர்கள் காலமாகிவிட்டார். அன்னார் காலஞ்சென்ற ஆறுமுகம் பொன்னம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி கனகம்மா அவர்களின் அருமைத் தாயாரும், காலஞ்சென்ற சரவணமுத்து அவர்களின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற திருமதி மரியம்மா மாரிமுத்து அவர்களின் அருமைச் சகோதரியும், புவனேஸ்வரி, துரைராசா, ராணி, மரியதாஸ், மலர், அலோஷியஸ், ஸ்ரீஸ்கந்தராஜா, சோதி, ஆனந்தவடிவேல், காஞ்சனா, பேபி, ஞானேந்திரா, தேவி, இராசலிங்கம், உதயகுமார், காலஞ்சென்ற சந்திரகுமார், விக்னேஸ்வரி ஆகியோரின் ஆசைப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 04-10-92 (ஞாயிற்றுக்கிழமை) காலை 10 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக அவரின் இல்லத்திலிருந்து கொழும்புத்துறை துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திருமதி ச. கனகம்மா (மகள்)

748. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

[22767]

## சின்னத்தம்பி நடராசா (ராசு)

புங்குடுதீவு 10 ஆம் வட்டாரம் கண்ணகி அம்மன் கோவிலடியைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா (ராசு) கொழும்பில் 02-10-92 இல் காலமானார். இவர் காலஞ்சென்ற சின்னத்தம்பி - செல்லாச்சியின் அன்பு மகனும், காலஞ்சென்ற கந்தையா - வள்ளியம்மையின் அன்பு மருமகனும், சின்னம்மாவின் அன்புக் கணவரும், தங்கக்குட்டியின் அன்புச் சகோதரனும், கந்தசாமி, இரத்தினசிங்கம், சிவரெட்ணம் ஆகியோரின் மாமனாரும், நடேசு, தம்பிராசா ஆகியோரின் மைத்துனரும், சாந்தகுமார், வசந்தகுமார், நந்தகுமார், உதயகுமார், சந்திரகுமார், பாஸ்கரன், சூரியகுமார், ராஜகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும், சூரியகுமாரி, புஸ்பராணி, விமலாதேவி, உமா, கலைச்செல்வி, ராஜன் ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 05-10-92 திங்கட்கிழமை கொழும்பில் நடைபெறும் என்பதை உற்றார், உறவினர்களுக்கு அறியத்தருகின்றோம்.

தகவல்:
க. துரைராசா

8/5 சீனிவாசகம் வீதி,
கொட்டடி.

[22768]

## சோமலிங்கம் தியாகராசா

29 - 09 - 1992 உதயனில் வெளியான மரண அறிவித்தல் தொடர்பாக—

பூநகரியைப் பிறப்பிடமாகவும் பளையை வதிவிடமாகவும் கொண்ட காலஞ் சென்ற சோமலிங்கம் தியாகராசாவின் இறுதிக் கிரியைகள் 02 - 10 - 1992 அன்று இத்தாவிலில் நடைபெற்றன என்பதை அறியத்தருகின்றோம். இதனை உற்றார், உறவினர். நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

– குடும்பத்தினர்.

புலோப்பளை றோட்,
பளை.

(5362)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 361, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 04-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org